**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI.**

Judicial form No.53
(See Rule 42)

# DEPOSITION OF WITNESS

**CC.No.32/2023**

PW-2

| | | | |
|---|---|---|---|
| Name | அமல்ராஜ் (PW1) | | |
| Father's Name | பால்ராஜ் | | |
| Village | கருணைபாளையம் | | |
| Taluk | அவிநாசி | | |
| District | திருப்பூர் மாவட்டம் | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 10**th day of February 2026** by M.Thangamani, Magistrate Clerk, JM Court, Avinashi by following the direction of Officer of this Court.

*(1 and 2 Accused present)*

**முதல் விசாரணை(அரசு தரப்பு):-**

**1)** நான் மேற்படி முகவரியில் குடியிருந்து கொண்டு தனியார் பணியன் கம்பெனியில் வேலை செய்கிறேன். என் மனைவி அபித்தாமேரி சின்னகருணைபாளையத்தில் அல்போன்சா என்ற பெயரில் மளிகை கடை வைத்து நடத்தி வருகிறார், கடந்த 22.06.2022 ம் தேதி நான் கம்பெனிக்கு சென்று விட்டேன். எனது மனைவி மளிகை கடையை பார்த்து கொண்டார். அன்றுமதியம் 2.30 மணிக்கு எனக்கு போன் செய்து எனது மனைவி கடையில் இருந்தபோது ஒரு நபர் சிகிரெட் வாங்கிவிட்டு எனது கழுத்தில் 1 1/2 பவுன் செயினை பறித்து சென்று விட்டதாக சென்னார். நான் உடனே கடைக்கு வந்து எனது மனைவியை விசாரித்தேன். அப்போது எனது மனைவி குழந்தையை வைத்துயிருக்கும் போது ஒரு நபர் சிகிரெட் வாங்கியதாகவும் மற்றொரு நபர் பைக்கில் நின்று இருந்ததாகவும், அப்போது சிகிரெட் வாங்க வந்த நபர் கழுத்தில் இருந்த நகையை பறித்து சென்று விட்டதாக சொன்னார். அந்த நகை பறித்த நபர் கருப்பாக இருந்ததாக சொன்னார். பிறகு நான் காவல் நிலையம் அழைத்து வந்தேன் எனது மனைவி புகார் கொடுத்தார். பிறகு நான் 10 நாட்களில் நகை பறித்த சென்ற நபரை பிடித்துவிட்டதாக சொனன்னார்கள் நாங்கள் காவல் நிலையம் சென்றோ்ம். எனது மனைவி நகையை அடையாளம் காட்டினார். பின்னிட்டு நீதிமன்றத்தில் மனு

தாக்கல் செய்து பெற்றுக்கொண்டோம். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

மேற்சொன்ன விபரத்தை தான் நான் காவல்த்துறையின் விசாரணையின் போது சொன்னேன். சம்பவத்தை பற்றி எனக்கு நேரில் எனக்கு தெரியாது. நான் சொன்ன சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் 22.06.2022 ம் தேதி என்றால் சரிதான். நகை எனது மனைவியுடையது என்பதை காண்பிக்க நான் காவல் நிலையத்தில் ரசீதுகள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. சம்பவத்தின் போது எனது மனைவியின் நகையை புகைப்படத்தின் மூலம் காண்பித்தேனா என்றால் காண்பித்தேன். எனது மனைவி கொடுத்த பொய்யான புகாரின் அடிப்படையில் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** : இல்லை

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.<br><br>(Sd–)N.Keerthana<br>குற்றவியல் நீதித்துறை நடுவர், அவிநாசி. |